www.surabooks.com

சூராவின் CBSE

# தமிழ் உரைநூல்

வகுப்பு 9

புதிய வினாத்தாள்
அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## சிறப்பம்சங்கள்

- செய்யுள், உரைநடை விளக்க மனவரைபடங்கள்
- செய்யுள் வரிவினா விடைகள்
- செய்யுள், உரைநடை எளிமையான வினாக்கள் மற்றும் விடைகள்
- இலக்கண விளக்கம் மற்றும் மன வரைபடங்கள்
- CBSE வினாத்தாள் அடிப்படையில் சான்றுதருக, நிரப்புக, இலக்கணக் குறிப்பு எழுதுக, கூறியவாறு செய்க – பகுதி இலக்கண வினாக்கள் விடைகள்.
- திருக்குறள் சீர்களால் நிரப்புக – வினா விடைகள்
- எளிய நடையில் துணைப்பாட வினாக்கள் விடைகள்
- பொதுப்பத்தி வினாக்கள் – விடைகள் (பலவுள் தெரிக – சுருக்கமான விடையளி மாதிரி)
- காட்சியைக் கண்டு கவினுற எழுதுக – படங்கள் மற்றும் விடைகள்.
- முக்கிய கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள்
- CBSE மாதிரி வினாத்தாள்கள் தரப்பட்டுள்ளன.

சூரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

For Orders Contact
80562 94222 / 81242 01000 / 81243 01000/96001 75757 / 98409 26027
enquiry@surabooks.com
Ph: 8124201000 / 8124301000

© வெளியீட்டாளர்கள்

குறியீட்டு எண் : CB9_01

**எழுதி வழங்கியவர்**
**சு.முத்தமிழ்ப்பிரியா,** M.A., M.Ed
**திருத்தியவர்**
**நா.சுந்தர், B.Lit.,**

All rights reserved © SURA Publications. No part of this book may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, digitally, electronically, mechanically, photocopying, recorded or otherwise, without the written permission of the publishers. Strict action will be taken.

**மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு**

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 81242 01000 / 81243 01000
வாட்ஸ்அப் : 81242 01000 / 98409 26027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

**Head Office**
**Sura Publications**
1620, 'J' Block, 16th Main Road,
Anna Nagar, Chennai - 600 040.
**Phone :** 044 - 4862 9977, 044 - 4862 7755.
**E-mail :** orders@surabooks.com
**Website :** www.surabooks.com

**For Orders Contact**
80562 94222
81242 01000
81243 01000
96001 75757
98409 26027

15-4-2025



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** – திருவள்ளுவர்

**எங்கள் வாழ்த்திற்குரிய**

**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் CBSE தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** ஒன்பதாம் வகுப்பிற்கான **CBSE தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

CBSE வினாத்தாள் அடிப்படையில் செய்யுள், உரைநடை, இலக்கணம், துணைப்பாட வினாக்கள் விடைகள், கடிதங்கள் மற்றும் பொதுக்கட்டுரைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த CBSE தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**
**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)

## மாணவச் செல்வங்களே...

- ஆர்வமே சிறந்த செயலாக்கத்திற்கான வழி...
- பாடங்களை ஆர்வத்துடன் புரிந்து கொண்டு கதைப் போல் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு செய்யுளையும் அந்நூல், இயற்றியவர் பெயர் அறிந்திருக்க வேண்டும்.
- பாடலின் தொகுப்பு (அல்லது) அதன் தலைப்பு முதலியவற்றை அறிவது அவசியம்.
- செய்யுள் பகுதியில் நூற்குறிப்பு, ஆசிரியர் குறிப்பு, சொல்லும் பொருளும், இலக்கணக் குறிப்பு படித்தல் அவசியம்.
- தொடர்நிலைச் செய்யுள் பகுதியில் இடம்பெறும் பாத்திரங்களும் அவர்களின் கூற்று ஆகியவற்றை அறிய வேண்டும்.
- நூல்களின் பாவகை, அடிவரையறை, மொத்தமுள்ள அடிகள் போன்றவற்றை அறிய வேண்டும்.
- கட்டுரை வினாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளுக்கான தலைப்பை எழுத வேண்டும். குறிப்புகளைக் கொண்டு குறிப்புச்சட்டகம் அமைத்தல் வேண்டும். குறிப்புகளைக் கொண்டு முன்னுரை மற்றும் முடிவுரையோடு குறைந்தபட்சம் மூன்று அல்லது நான்கு உட்தலைப்புகள் எழுத வேண்டும்.
- பழமொழிகள், திருக்குறள், மேற்கோள்கள், செய்யுள் வரிகள் போன்றவற்றைப் பயன்படுத்தினால் பொதுக்கட்டுரை சிறப்பாக அமையும்.

**ஆழ்ந்து படியுங்கள் வெற்றி உங்களுக்கே!**





www.surabooks.com

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 1. | மொழி<br>**அமுதென்று பேர்** | திராவிட மொழிக்குடும்பம் (உரைநடை)<br>தமிழோவியம் (செய்யுள்)<br>தமிழ்விடு தூது (செய்யுள்)<br>வளரும் செல்வம் (துணைப்பாடம்)<br>தொடர் இலக்கணம் (இலக்கணம்) | 1-40 |
| 2. | இயற்கை, சுற்றுச்சூழல்<br>**உயிருக்கு வேர்** | நீரின்றி அமையாது உலகு (உரைநடை)<br>பட்டமரம் (செய்யுள்)<br>பெரியபுராணம் (செய்யுள்)<br>புறநானூறு (செய்யுள்)<br>தண்ணீர் (துணைப்பாடம்) | 41-60 |
| 3. | பண்பாடு<br>**உள்ளத்தின் சீர்** | ஏறு தழுவுதல் (உரைநடை)<br>மணிமேகலை (செய்யுள்)<br>அகழாய்வுகள் (துணைப்பாடம்)<br>வல்லினம் மிகும் இடங்கள் (இலக்கணம்)<br>திருக்குறள் (வாழ்வியல்) | 61-90 |
| 4. | அறிவியல், தொழில்நுட்பம்<br>**எட்டுத்திக்கும் சென்றிடுவீர்** | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் (உரைநடை)<br>ஓ, என் சமகாலத் தோழர்களே! (செய்யுள்)<br>உயிர்வகை (செய்யுள்)<br>விண்ணையும் சாடுவோம் (துணைப்பாடம்) | 91-106 |
| 5. | கல்வி<br>**கசடற மொழிதல்** | கல்வியில் சிறந்த பெண்கள் (உரைநடை)<br>குடும்ப விளக்கு (செய்யுள்)<br>சிறுபஞ்சமூலம் (செய்யுள்)<br>வீட்டிற்கோர் புத்தகசாலை (துணைப்பாடம்) | 107-124 |


www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **கலை பல வளர்த்தல்** | சிற்பக்கலை **(உரைநடை)** | 125-160 |
| | | இராவண காவியம் **(செய்யுள்)** | |
| | | நாச்சியார் திருமொழி **(செய்யுள்)** | |
| | | செய்தி **(துணைப்பாடம்)** | |
| | | புணர்ச்சி **(இலக்கணம்)** | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | |
| ஆகுபெயர் **(இலக்கணம்)** | | | 161-166 |
| யாப்பிலக்கணம் **(இலக்கணம்)** | | | 167-174 |
| அணியிலக்கணம் **(இலக்கணம்)** | | | 175-178 |
| பொதுப்பத்தி வினா - விடைகள் | | | 179-220 |
| காட்சியைக் கண்டு கவினுற எழுதுக | | | 221-223 |
| கடிதங்கள் | | | 224-236 |
| பொதுக்கட்டுரைகள் | | | 237-264 |
| CBSE மாதிரி வினாத்தாள்கள் | | | 265-278 |



www.surabooks.com



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# TO ORDER WITH US

**SCHOOLS and TEACHERS:**

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

**DIRECT DEPOSIT**

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : Padi | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : Asiad Colony | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **13240200032412** | Our A/c No. | : **50200031530945** |
| Bank Name | : **FEDERAL BANK** | Bank Name | : **HDFC BANK** |
| Bank Branch | : Anna Nagar | Bank Branch | : Cenotaph Road, Teynampet |
| IFSC | : FDRL0001324 | IFSC | : HDFC0001216 |

After Deposit, please send challan and order to our address.
email to : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

G Pay **For Google Pay : 98409 26027**

**For PhonePe : 98409 26027**

**DEMAND DRAFT / CHEQUE**

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**. The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

**STUDENTS :**

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar, Chennai - 600 040.
Phone : 044-4862 9977, 044-4862 7755.
Mobile : 96001 75757 / 81242 01000 / 81243 01000.
Email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com

**TAMIL**

**Subject Code- 006)**

**CLASS IX- (2025- 2026)**

**Time: 3 hrs** **Total: 80 Marks**

**Section –A - Reading Unseen Passage** **10 marks**

1. Unseen passage- MCQ (5 marks)
(Mozhi, Ilakkiyam, Varalaru)

2. Unseen passage - Short answer - (5 marks)
**(Mozhi, Ilakkiyam, Varalaru)**

**Section -B Grammar Section (MCQ)** **12 marks**

1. Thodar Ilakkanam
2. Vallinam migum idanggal
3. Punarchi
4. Aguppeyar
5. Yappilakkanam
6. Ani ilakkanam

**Section - C Main Course Book - (MCQ, Short Answer & Long Answer)** **31 Marks**

**Part -1: Prose**

1. Dravida mozhi kudumbam
2. Neerintri Amaiyaathu Ulagu
3. Eru Thazhuvuthal
4. Iyanthirangkalum Inaiyavazhi Payanpaadum
5. Kalviyil Sirantha Penkal
6. Chirpakalai



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**Part-II: Poetry**

1. Tamil Oviyam
2. Tamil vidu Thoothu
3. Pattamaram
4. Periya Puraanam
5. Puranaanuru
6. Manimekalai
7. Thirukkural
8. O En Samakaala Thoozharkale
9. Uyirvakai
10. Kudumba Vilakku
11. Sirupanchamoolam
12. Raavana kaaviyam
13. Naachiyaar Thirumozhi
14. Thirukkural

**Section –D Non-detail** **10 Marks**

1. Valarum selvam
2. Thanneer
3. Agzhaayvugal
4. Vinaaiyum Chaaduvom
5. Veetirkor Puththagasaalai
6. Seithi

**Section –E Creative Writing** **17 Marks**

1. Official / Informal Letter (8marks)
2. Essay writing (6marks)
3. Picture Description (3 marks)

**Textbook Prescribed:**

Tamil Textbook –Class IX, Edition-2024.





www.surabooks.com

**Design of Question Paper**
**Class IX (2025-2026)**

| S.no. | Topic | Type of Questions | No. of Questions | Marks | Total |
|---|---|---|---|---|---|
| **Section –A Reading Unseen Passage** | | | | | |
| 1 | Unseen Passage (1) | MCQ | 5 | 5x1 | 5 |
| 2 | Unseen Passage (2) | SA | 5 | 5x1 | 5 |
| **Section -B Grammar** | | | | | |
| 3 | Give Example | MCQ | 5 | 3x1 | 3 |
| 4 | Fill up | MCQ | 5 | 3x1 | 3 |
| 5 | Illakkana kurippu | MCQ | 5 | 3x1 | 3 |
| 6 | Do as Directed | MCQ | 5 | 3x1 | 3 |
| **Section -C Main Course Book** | | | | | |
| 7 | Thirukkural Fill ups | MCQ | 3 | 3x1 | 3 |
| 8 | Poetry Comprehension | MCQ | 5 | 5x1 | 5 |
| 9 | Poetry | SA | 4 | 2x4 | 8 |
| 10 | Prose | LA | 5 | 3x5 | 15 |
| **Section –D Non-detail** | | | | | |
| 11 | Non-detail | LA | 3 | 1x10 | 10 |
| **Section –E Creative Writing** | | | | | |
| 13 | Picture Description | SA | 1 | 1x3 | 3 |
| 14 | Letter Writing | LA | 2 | 1x8 | 8 |
| 15 | Essay Writing | LA | 3 | 1x6 | 6 |
| | | | | | 80 |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

| | |
|---|---|
| MCQ<br>Descriptive | 25 Marks<br>55 Marks |
| Unseen Passage | 10 Marks |
| Grammar | 12 Marks |
| Main course book | 31 Marks |
| Non-detail | 10 Marks |
| Creative Writing | 17 Marks |
| | 80 Marks |

**Marks Distribution and No. of Periods ,TAMIL ( 006) IX (2025– 2026)**

| | Topics | Marks | Weightage |
|---|---|---|---|
| Sec A | **Comprehension (Unseen Passage)** | 10 | |
| Sec B | **Grammar** | 12 | 80 |
| Sec C | **Course book** | | |
| | Thirukkural Fill ups | 3 | |
| | Poetry comprehension | **5** | |
| | Poetry Short Answer | **8** | |
| | Prose Long Answer | **15** | |
| Sec D | Non-detail long Answer | **10** | |
| Sec E | **Creative Writing** | | |
| | Picture Description | 3 | |
| | Letter Writing | 8 | |
| | Composition (General Essay) | 6 | |
| | **Internal Assessment** | 20% | 20 |
| | **Total %** | 100% | 100 |



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**இயல் 1 - மொழி - அமுதென்று பேர்**

# திராவிட மொழிக்குடும்பம் (உரைநடை உலகம்)

**மன வரைபடம்**

**மொழி குடும்பங்கள் நான்கு வகை**
இந்தோ– ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன – திபெத்திய மொழிகள்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் **– கால்டுவெல்**

இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலை– ச. அகத்திய லிங்கம்

மொழிகள் பிறப்பு, தொடர்பு அமைப்பு, உறவு அடிப்படையில் பல மொழிக் குடும்பங்கள் பிரிப்பு

**திராவிட நாகரிகம்**
**மொகஞ்சதாரோ –** ஹரப்பா அகழாய்வு
**குமரிலபட்டர்–** தமிழ் → திராவிடா,
**ஹீராஸ் பாதிரியார்** – தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா

**மொழி ஆய்வு**
அறிஞர் வில்லியம் ஜோன்ஸ், பாப், ராஸ்க், கிரிம்,
தென்னிந்திய மொழி பிரான்சிஸ் எல்லிஸ், ஹோக்கன் – தமிழியன், மாக்ஸ் முல்லர்– கருத்து ஏற்பு

**திராவிட மொழிக்குடும்பம்**

| **தென்திராவிடம்** | **நடுத்திராவிடம்** | **வட திராவிடம்** |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு(கொடகு), துளு கோத்தா, தோடா, கொரகா, இருளா | தெலுங்கு, கூயி, கூவி(குவி), கோண்டா, கோலாமி, (கொலாமி), நாய்க்கி, பெங்கோ, மண்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா | குரூக், மால்தோ, பிராகுய்(பிராகுயி) |

**பொதுப்பண்புகள்**

பண்புகள்
வேர்ச்சொல்
அடிச்சொல்

**குறில், நெடில் வேறுபாடு**
அடி – குறில் வளி – குறில்
ஆடி – நெடில் வாளி – நெடில்


**பால்பாகுபாடு**
வாய் – ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் – பொதுப்பால், உயர்திணை, அஃறிணை பால் காட்டும் விகுதிகள் இல்லை. எ.கா. கடுவன்–மந்தி; களிறு – பிடி

**வினைச்சொற்கள்**
திணை, பால், எண், இடம் காட்டுகின்றன.

www.surabooks.com



**காலந்தோறும் தமிழின் வரிவடிவ வளர்ச்சி**



**சில திராவிட மொழிகளின் பழமையான இலக்கிய இலக்கணங்கள்**

| மொழி | இலக்கியம் | காலம் | இலக்கணம் | காலம் | சான்று |
|---|---|---|---|---|---|
| தமிழ் | சங்க இலக்கியம் | பொ.ஆ.மு.5 – பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டு அளவில் | தொல்காப்பியம் | பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டு அளவில் | தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ) சாகித்திய அகாதெமி |
| கன்னடம் | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ.9ஆம் நூற்றாண்டு | கவிராஜ மார்க்கம் | பொ.ஆ.9ஆம் நூற்றாண்டு | இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் – செ.வை. சண்முகம் |
| தெலுங்கு | பாரதம் | பொ.ஆ.11ஆம் நூற்றாண்டு | ஆந்திர பாஷா பூஷணம் | பொ.ஆ.12ஆம் நூற்றாண்டு | |
| மலையாளம் | ராம சரிதம் | பொ.ஆ.12ஆம் நூற்றாண்டு | லீலா திலகம் | பொ.ஆ.15ஆம் நூற்றாண்டு | மலையாள இலக்கிய வரலாறு சாகித்திய அகாதெமி |

www.surabooks.com

www.surabooks.com



**திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை :**

| தமிழ் | மலையாளம் | தெலுங்கு | கன்னடம் | துளு | கூர்க் |
|---|---|---|---|---|---|
| மரம் | மரம் | மானு | மரம் | மர | மர |
| ஒன்று | ஒண்ணு | ஒகடி | ஒந்து | ஒஞ்சி | – |
| நூறு | நூறு | நூரு | நூரு | நூது | – |
| நீ | நீ | நீவு | நீன் | ஈ | நின் |
| இரண்டு | ஈர்ரெண்டு | ஈர்ரெண்டு | எரடு | ரட்டு | ––––– |
| நான்கு | நால், நாங்கு | நாலுகு | நாலு | நாலு | –––––– |
| ஐந்து | அஞ்சு | ஐது | ஐது | ஐனு | ––––– |

## வினாக்கள்

### குறுவினா

**1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது ? (பாடநூல் வினா)**

நாங்கள் பேசும் மொழி தமிழ். அம்மொழி இந்திய மொழிக் குடும்பத்தில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

**2. திராவிட மொழிகள் குறித்து கால்டுவெல் அவர்களின் கூற்று யாது ?**

- 1856 திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.
- இதனை மேலும் உறுதிப்படுத்தப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார்.

### சிறுவினா

**1. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை ? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக. (பாடநூல் வினா)**

மொழிகள் பரவிய நில அடிப்படையில் திராவிட மொழிகள் மூன்று வகைப்படும். அவை, தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள்.

**தமிழ் :**

- திராவிட என்னும் சொல்லே தமிழ் என்னும் சொல்லில் இருந்து உருவானதே ஆகும்.
- தமிழ் தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது.
- திராவிட மொழிகளுள் பிற மொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படுகிறது.
- ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் பெற்ற மொழி.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**2. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழியில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது ?**

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன. **(பாடநூல் வினா)**

| | | |
|---|---|---|
| மூன்று | – | தமிழ் |
| மூணு | – | மலையாளம் |
| மூடு | – | தெலுங்கு |
| மூரு | – | கன்னடம் |
| மூஜி | – | துளு |

**3. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது ?** **(பாடநூல் வினா)**

- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது
- தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.
- அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

**4. இந்தியா மொழிகளின் காட்சிச் சாலையாக எவ்வாறு திகழ்கிறது ?**

- இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை,

  1. இந்தோ – ஆசிய மொழிகள்
  2. திராவிட மொழிகள்
  3. ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
  4. சீன – திபெத்திய மொழிகள்

- என அழைக்கப்படுகின்றன. பல கிளை மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது.

**5. திராவிட நாகரிகத்தின் தோற்றம் குறித்து எழுதுக.**

- உலகின் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ – ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது.
- திராவிடம் என்னும் சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்.
- தமிழ் என்னும் சொல்லிலிருந்துதான் திராவிடா என்னும் சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.
- ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தை தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா த்ராவிடா → திராவிடா என்று விளக்குகின்றார்.

www.surabooks.com



**6. திராவிட மொழிக்குடும்பத்தின் வரலாற்றை எழுதுக.**

- திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென் திராவிட மொழிகள் எனவும் தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும் பிராகுயி முதலானவை வடதிராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

| தென் திராவிடம் | நடுத் திராவிடம் | வடதிராவிடம் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு (கொடகு), துளு கோத்தா, தோடா, கொரகா, இருளா | தெலுங்கு, கூயி, கூவி(குவி), கோண்டா, கோலாமி, (கொலாமி), நாய்க்கி, பெங்கோ, மண்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா | குரூக், மால்தோ, பிராகுய்(பிராகுயி) |

- மேலுள்ள பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் திராவிட மொழிகள் மொத்தம் 28 எனக் கூறுவர்.

**7. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகள் யாவை ?**

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

**சான்று :**

**அடிச்சொல் திராவிட மொழிகள் :**

கண் – தமிழ்
கண்ணு – மலையாளம், கன்னடம்
கன்னு – தெலுங்கு, குடகு
ஃகன் – குரூக்
கெண் – பர்ஜி
கொண் – தோடா

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.

மூன்று – தமிழ்
மூணு – மலையாளம்
மூடு – தெலுங்கு
மூரு – கன்னடம்
மூஜி – துளு

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com



**குறில், நெடில் வேறுபாடு :**

திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

| குறில் | நெடில் |
|---|---|
| அடி | ஆடி |
| வளி | வாளி |

**8. திராவிட மொழிகளின் பால்பாகுபாடுகள் எவ்வாறு அமைந்துள்ளது ?**

- திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால் வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.
- உயிரற்ற பொருள்களும் கண்ணுக்குப் புலப்படாத நுண்பொருள்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன.
- இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும், கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன.
- ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன.
- வாய் – ஆண்பால், மூக்கு – பெண்பால், கண் – பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.
- திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.
- அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை.

**9. திராவிட மொழிகளில் வினைச்சொற்களின் சிறப்பு யாது ?**

- ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொல் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண், இடம் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை.
- திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.
  எடுத்துக்காட்டு : வந்தான் – உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை.
- இவ்வியல்புக்கு மாறாக மலையாள மொழி மட்டுமே அமைந்துள்ளது.
- அம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பால் காட்டும் விகுதிகள் இல்லை.
- தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்துகொள்ள முடியும்.

**10. தமிழின் தனித்தன்மையினை பட்டியலிடுக.**

- தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடையது தமிழ் மொழியாகும்.
- இலங்கை, மலேசியா, பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா –மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ் மொழி.

www.surabooks.com

- ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.
- திராவிட மொழிகளுள் பிறமொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.
- தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் 'தாய்மொழியாகக்' கருதப்படுகிறது.

**நெடுவினா**

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.** **(பாடநூல் வினா)**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. திராவிட மொழி |
| 3. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் |
| 4. பொதுப்பண்புக் கூறுகள் |
| 5. முடிவுரை |

**முன்னுரை :**

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்தமொழியாகத் திகழ்கின்றது தமிழ். பிற திராவிட மொழிகளை விட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது தமிழ்மொழி என்பதைச் சான்றுகளுடன் காணலாம்.

**திராவிட மொழி :**

இலக்கண இலக்கியவளம் பெற்ற தொன்மையான மொழி தமிழ். பிற திராவிட மொழிகளைவிட தனக்கென தனித்த இலக்கண இலக்கிய வளம் பெற்று விளங்கும் மொழி தமிழ்.

தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்ற சொல் பிறந்ததாக ஹீராஸ்பாதிரியார் விளக்கி கூறுகிறார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் :**

பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து 'தென்னிந்திய மொழிகள்' என அழைத்தார்.

1886ல் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' எனும் தன் நூலில் திராவிட மொழிகள் ஆரியமொழி குடும்பத்திலிருந்து வேறுபட்டவை என்று கூறினார்.

**பொதுப்பண்புக் கூறுகள் :**

கால்டுவெல் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளை எடுத்துரைத்தார். திராவிட மொழிகளுக்குச் சில பொதுப்பண்புக் கூறுகள் காணப்படுகின்றன.

- **அடிச்சொல் :**

  சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால் அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருக்கிறது.

www.surabooks.com

www.surabooks.com



| அடிச்சொல் | திராவிட மொழிகள் |
|---|---|
| கண் | தமிழ் |
| கண்ணு | மலையாளம், கன்னடம் |
| கன்னு | தெலுங்கு, குடகு |
| ஃகன் | குரூக் |
| கெண் | பர்ஜி |
| கொண் | தோடா |

- **எண்ணுப் பெயர்கள்:**

  மூன்று – தமிழ் மூணு – மலையாளம் மூடு – தெலுங்கு

  மூரு – கன்னடம் மூஜி – துளு

- **குறில், நெடில் வேறுபாடு :**

  குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

  அடி – குறில் ஆடி – நெடில்

  வளி – குறில் வாளி – நெடில்

- **பால் பாகுபாடு:**

  திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு, உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை, தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.

  **(எ.கா.)**

| ஆண் | பெண் |
|---|---|
| கடுவன் | மந்தி |
| களிறு | பிடி |

- **வினைச் சொற்கள்:**

  திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் திணை, பால், எண், இடம், காலம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன.

  **(எ.கா)** வந்தான் (உயர்திணை ஆண்பால் படர்க்கை ஒருமை)

**முடிவுரை :**

தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம் பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப் பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன. தமிழ்மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகளைப் பெற்று, பிற மொழிகளுக்கு தாய்மொழியாகவும் விளங்குகிறது. எனவே, திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்கு தமிழ் பெருந்துணையாக இருக்கிறது.


☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# தமிழோவியம் (கவிதைப்பேழை)

- ஈரோடு தமிழன்பன்

**மன வரைபடம்**



www.surabooks.com



## நூற்குறிப்பு

- ஈரோடு தமிழன்பன் எழுதிய '**தமிழோவியம்**' என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது.
- இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!'' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிரியர் குறிப்பு

- ஈரோடு தமிழன்பன் **புதுக்கவிதை, சிறுகதை** முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.
- **ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ** எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
- இவரது '**வணக்கம் வள்ளுவ**' என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமி விருது** வழங்கப்பட்டது.
- 'தமிழன்பன் கவிதைகள் **இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம்** உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## இலக்கணக் குறிப்பு

- எத்தனை எத்தனை, விட்டு விட்டு – அடுக்குத் தொடர்கள்
- ஏந்தி – வினையெச்சம்
- காலமும் – முற்றும்மை

## பகுபத உறுப்பிலக்கணம்

| | | |
|---|---|---|
| வளர்ப்பாய் | – | வளர் + ப் + ப் + ஆய் |
| வளர் | – | பகுதி |
| ப் | – | சந்தி |
| ப் | – | எதிர்கால இடைநிலை |
| ஆய் | – | முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி |

## வினாக்கள்

**குறுவினா**

1. **தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

**(பாடநூல் வினா)**

'காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!'

தமிழ் என்றும் நிலையானது நிலைத்த மொழி என்றும், பசுமை மாறா இளமை மாறா மொழி தமிழ் மொழியே என்று தமிழ்மொழியின் அழியாத்தன்மையைக் கூறுவதால் இவ்வடிகள் என்னை ஈர்த்தன.

2. **அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் – இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?** (பாடநூல் வினா)

மக்களின் உள்ளத்தில் உள்ள அன்பையும் வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறும் இலக்கணத்தை அகப்பொருள்என்றும், அகம்சாராத அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ்முதலியவற்றைக் கூறும் இலக்கணத்தைப் புறப்பொருள் என்றும் அமைந்த இலக்கியம் இலக்கணமாய்த் திகழ்வதை இவ்வரிகள் உணர்த்துகின்றன.

**சிறுவினா**

1. **புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.** (பாடநூல் வினா)

- கல்தோன்றா மண்தோன்றா காலத்தே முன் தோன்றியது தமிழ்மொழி.
- இலக்கண முறையோடு இயற்றப்பட்ட காப்பியங்கள், அகம், புறமென எண்ணற்ற இலக்கியங்கள் தமிழில் உள்ளன.
- உலக மக்களுக்கெல்லாம் ஒப்பற்ற நீதி இலக்கியமாய், திகழும் திருக்குறள் தோன்றியது. தமிழே மானுட மேன்மையை வளர்த்திட புது சிந்தனைகள் படைத்தது தமிழே!
- மனித வாழ்வின் தீமைகளைப் போக்கும் சிந்தனைகள் சித்தர்கள் மூலம் தோன்றின.
- எனவே தமிழ்மொழி மீது குறை சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்த்திட வேண்டும் என்று ஈரோடு தமிழன்பன் பாடுகிறார்.

2. **ஈரோடு தமிழன்பன் குறித்து குறிப்பு எழுதுக.**

- ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
- ஈரோடு தமிழன்பனின் 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
- 'தமிழன்பன் கவிதைகள்' தமிழக அரசின் பரிசு பெற்ற நூலாகும். இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## செய்யுள் வரி வினா விடை

1. **அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை**
**அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்**
**நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்**
**நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!**
**ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி**
**ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்**
**மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்**
**மட்டுமே போதுமே.**

**- காலம் பிறக்கும் முன்...**

**வினாக்கள்**

1. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?**
 அ) தமிழ் விடு தூது  ஆ) தமிழோவியம்
 இ) தமிழின் சிறப்பு  ஈ) தமிழன்பன் கவிதைகள் **விடை ஆ) தமிழோவியம்**
2. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**
 அ) ஈரோடு தமிழன்பன்  ஆ) மு.மேத்தா
 இ) கவிஞர் கா.மு.ஷெரிப்  ஈ) வண்ணதாசன் **விடை அ) ஈரோடு தமிழன்பன்**
3. **நிகரில்லாதது எது ?**
 அ) சங்க இலக்கியங்கள்  ஆ) காப்பியங்கள்
 இ) சிற்றிலக்கியங்கள்  ஈ) அற இலக்கியங்கள் **விடை ஆ) காப்பியங்கள்**
4. **மானிட மேன்மையைச் சாதித்திட எது மட்டும் போதும் ?**
 அ) சிலப்பதிகாரம்  ஆ) நற்றிணை
 இ) பரிபாடல்  ஈ) திருக்குறள் **விடை ஈ) திருக்குறள்**
5. **இலக்கியங்கள் எவ்வாறு அமைந்துள்ளன ?**
 அ) அகம், புறம்  ஆ) எழுத்து, சொல்
 இ) இன்பம், துன்பம்  ஈ) யாப்பு, அணி **விடை அ) அகம், புறம்**

---

2. **எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்**
**ஏந்தி வளர்த்தது தாயெனவே**
**சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்**
**சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே....**

**- காலம் பிறக்கும் முன்...**

**விரலை மடக்கியவன் இசையில்லை - எழில்**
**வீணையில் என்று சொல்வதுபோல்**
**குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்**
**கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!**

**வினாக்கள்**

1. **எத்தனை எத்தனை – இலக்கணக்குறிப்பு தருக.**
 அ) இரட்டைக்கிளவி  ஆ) அடுக்குத்தொடர்
 இ) உம்மைத்தொகை  ஈ) உவமைத்தொகை **விடை ஆ) அடுக்குத்தொடர்**
2. **எதற்கு புதுக்கோலம் புனைய வேண்டும் ?**
 அ) பாடல் பாட  ஆ) இசை மீட்ட
 இ) தமிழ் வளர்க்க  ஈ) குறைகள் கூற **விடை இ) தமிழ் வளர்க்க**



www.surabooks.com

www.surabooks.com



**3. ஏந்தி – இலக்கணக்குறிப்பு தருக.**

அ) பெயரெச்சம் ஆ) ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

இ) முற்றும்மை ஈ) வினையெச்சம் **விடை ஈ) வினையெச்சம்**

**4. காலம் பிறக்கும் முன்னே பிறந்தது எது ?**

அ) இலக்கணம் ஆ) இலக்கியம்

இ) தமிழ்மொழி ஈ) கதைகள் **விடை இ) தமிழ்மொழி**

**5. இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) கவிஞர் சச்சிதானந்தம் ஆ) கவிஞர் முத்துலிங்கம்

இ) கவிஞர் மருதகாசி ஈ) ஈரோடு தமிழன்பன் **விடை ஈ) தமிழன்பன்**

**கூடுதல் வினாக்கள்:**

**1. ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை என்று கூறியவர் .............. .**

அ) பிச்சமூர்த்தி ஆ) வல்லிக்கண்ணன்

இ) முடியரசன் ஈ) தமிழன்பன் **விடை ஈ) தமிழன்பன்**

**2. உலகத் தாய்மொழி நாள் .............. .**

அ) பிப்ரவரி 19 ஆ) பிப்ரவரி 20

இ) பிப்ரவரி 21 ஈ) பிப்ரவரி 24 **விடை இ) பிப்ரவரி 21**


☆ ☆ ☆

www.surabooks.com

www.surabooks.com



# தமிழ்விடு தூது (கவிதைப்பேழை)




## நூற்குறிப்பு

- தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, **'வாயில் இலக்கியம்'**, **'சந்து இலக்கியம்'** என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக **'மாலையை வாங்கி வருமாறு'** அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் **'கலிவெண்பா'** வால் இயற்றப்படுவதாகும்.

www.surabooks.com



- தமிழ்விடு தூது, மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது.
- இந்நூல் **268** கண்ணிகளைக் கொண்டுள்ளது.
- தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.
- இந்நூலை **1930இல் உ.வே.சா.** முதன் முதலில் பதிப்பித்தார். இதன் **ஆசிரியர் யார்** என அறிந்துகொள்ள இயலவில்லை.

## இலக்கணக் குறிப்பு

- முத்திக்கனி – உருவகம்
- தெள்ளமுது – பண்புத்தொகை
- குற்றமிலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- நா – ஓரெழுத்து ஒருமொழி
- செவிகள் உணவான – நான்காம் வேற்றுமைத்தொகை
- சிந்தா மணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

- கொள்வார் – கொள் + வ் + ஆர்

கொள் – பகுதி
வ் – எதிர்கால இடைநிலை
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

- உணர்ந்த – உணர் + த்(ந்) + த் + அ

உணர் – பகுதி
த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
அ – பெயரெச்ச விகுதி

## வினாக்கள்

**குறுவினா**

**1. கண்ணி என்பதன் விளக்கம் யாது ?** **(பாடநூல் வினா)**

- இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
- அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

**2. தமிழ் பெற்றுள்ள பத்து குணங்கள் யாவை ?**

- முற்றும் உணர்ந்த தேவர்கள்கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள்.
- ஆனால், தமிழோ பத்துக் குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றுள்ளது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

**சிறுவினா**

**1. தமிழின் சிறப்புகள் யாவை ?**

- அறிவால் உண்ணப்படும் தேனாக இனிக்கிறது.
- புலவர்கள் குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்களைப் பாடி சிறப்புப் பெறுவதற்கு, அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுக்கிறது.
- அதனால் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூவகைப் பாவினங்களிலும் தமிழ் உறவு கொண்டு சிறப்புடையது.

**2. தமிழ்விடு தூது குறித்து எழுதுக.**

- தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, 'வாயில் இலக்கியம், சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.
- இது தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக 'மாலையை வாங்கி வருமாறு' அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பா'வால் இயற்றப்படுவதாகும்.
- தமிழ்விடு தூது, மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது.
- இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ளன.
- இந்நூலை 1930இல் உ.வே.சா முதன்முதலில் பதிப்பித்தார். இதன் ஆசிரியர் யார் என அறிந்துகொள்ள இயலவில்லை.

**நெடுவினா**

**1. தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக. (பாடநூல் வினா)**

| குறிப்புச்சட்டகம் |
|---|
| 1. முன்னுரை |
| 2. முத்தமிழ் |
| 3. பாவினம் |
| 4. குணங்கள் |
| 5. வண்ணங்கள் |
| 6. அழகு |
| 7. முடிவுரை |

**முன்னுரை :**

தமிழின் பெருமையை பாடுவதற்கு கவிஞர்கள் கவிதையை கருவியாக்கிக் கொண்டுள்ளனர். பல்வேறு சிறப்புகள் பெற்ற தமிழ் தூதுப் பொருளாக தமிழ்விடு தூது காணப்படுகின்றது. தமிழ்மொழியின் சிறப்புகளைப் பார்ப்போம்.

**முத்தமிழ் :**

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான வீடுபேற்றைத் தருகின்ற கனியாய் தமிழ் திகழ்கிறது. **இயல், இசை, நாடகம்** என மூன்றாய் முத்தமிழாய் சிறந்து விளங்குகிறது.

**பாவினம் :**

அறிவால் உண்ணப்படும் தேனாக இனிக்கிறது. புலவர்கள் குறவஞ்சி, பள்ளு ஆகிய நூல்களைப் பாடி சிறப்புப் பெறுவதற்கு, அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுக்கிறது. அதனால் தாழிசை, துறை, விருத்தம் ஆகிய மூவகைப் பாவினங்களிலும் தமிழ் உறவு கொண்டு சிறப்புடையது.

**குணங்கள் :**

முற்றும் உணர்ந்த தேவர்கள்கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால், தமிழ் பத்துக்குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் **பத்துக்குணங்களையும்** பெற்றுள்ளது.

**வண்ணங்கள் :**

மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்குமேல் இல்லை. தமிழ் புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளது.

**அழகு :**

நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் **சுவைகள் ஆறுக்கு** மேல் இல்லை. தமிழ் செவிகளுக்கு விருந்தளிக்கும் **ஒன்பது சுவைகளைப்** பெற்றுள்ளாய். தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத **அழகு** ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ ? தமிழ் நீங்காத அம்மை முதலிய **அழகுகள் எட்டினைப்** பெற்றுள்ளது.

**முடிவுரை :** இத்தகைய சிறப்புகளைப் பெற்றுள்ளதால், தூது அனுப்புவதற்குத் தமிழே சிறந்தது என்று தமிழ்விடு தூது காரணங்களாக விளக்கி கூறுகிறது.

## செய்யுள் வரி வினா விடை

1. **தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான**
**முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்**
**உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்**
**விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்**
**குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு**
**உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ**

**வினாக்கள்**

1. **இப்பாடலை இயற்றியவர் யார் ?**

அ) துரைமாணிக்கம் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) உடுமலை நாராயணகவி ஈ) ஆசிரியர் பெயர் தெரியவில்லை

**விடை: ஈ) ஆசிரியர் பெயர் தெரியவில்லை**

2. **இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது ?**

அ) மேகவிடு தூது ஆ) கிள்ளைவிடு தூது
இ) கிளிவிடு தூது ஈ) தமிழ்விடு தூது

**விடை: ஆ) தமிழ்விடு தூது**

3. **முத்தமிழ் – பிரித்து எழுதுக.**

அ) முத்து + தமிழ் ஆ முு + தமிழ்
இ) மூன்று + தமிழ் ஈ) மும்மை + தமிழ்

**விடை: இ) மூன்று + தமிழ்**

4. **குறம், பள்ளு என்பவை யாது ?**
அ) காப்பிய வகைகள் ஆ சிற்றிலக்கியங்கள்
இ) அறநூல்கள் ஈ) பக்தி இலக்கியங்கள் **விடை: ஆ) சிற்றிலக்கியங்கள்**

5. **மூன்றினம் எது ?**
அ) துறை, தாழிசை, விருத்தம் ஆ) திணை, பால், இடம்
இ) இயல், இசை, நாடகம் ஈ) அசை, சீர், தளை
**விடை: அ) துறை, தாழிசை, விருத்தம்**

---

2. **நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் - நாக்குலவும்**
**ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு**
**ஆன நவரசம்உண் டாயினாய் - ஏனோர்க்கு**
**அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ**
**ஒழியா வனப்புஎட்டு உடையாய்...**

**வினாக்கள்**

1. **நவரசங்கள் எத்தனை ?**
அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது **விடை: ஈ) ஒன்பது**

2. **ஊனரசம் பொருள் யாது ?**
அ) மிகுந்த சுவை ஆ) குறையுடைய சுவை
இ) சுவையில்லாதது ஈ) மாறுபட்ட சுவை **விடை: ஆ) குறையுடைய சுவை**

3. **வனப்பு – பொருள் யாது ?**
அ) வறுமை ஆ) செழுமை இ) அழகு ஈ) அடக்கம் **விடை: இ) அழகு**

4. **வண்ணங்கள் எத்தனை ?**
அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400 **விடை: அ) 100**

5. **வனப்புகள் எத்தனை ?**
அ) ஆறு ஆ) ஏழு இ) எட்டு ஈ) ஒன்பது **விடை: இ) எட்டு**

☆ ☆ ☆

www.surabooks.com

www.surabooks.com


# வளரும் செல்வம் (விரிவானம்)

| குறிப்புச் சட்டகம் |
|---|
| முன்னுரை |
| எண்ணிக்கைகளுக்கான தமிழ்ச்சொற்கள் |
| கலைச்சொற்களின் தேவை |
| கடல்சார்ந்த சொற்கள் |
| பா வடிவங்கள் |
| மொழிபெயர்ப்பின் தேவை |
| முடிவுரை |

**முன்னுரை :**

சொற்கள் வரலாற்றைப் பேசுபவை. ஒவ்வொரு சொல்லிலும் இனத்தின், மொழியின் வரலாறு இருக்கிறது. தமிழ்ச் சொற்கள் வழி தமிழர் நாகரிகத்தையும், வாழ்வையும் அறிய முடியும். தமிழ்மொழி பிறமொழி சொற்களை அப்படியே ஏற்பதில்லை என்பது மரபு. அந்த வகையில் கலைச் சொல்லாக்கத்திற்கானப் பணிகள் என்றும் முதன்மை பெற்றுள்ளன.

**எண்ணிக்கைகளுக்கான தமிழ்ச் சொற்கள் :**

கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கைகளுக்கான தமிழ்ச்சொற்கள்.

| பெயர் | எண் அளவு | பெயர் | எண் அளவு |
|---|---|---|---|
| முந்திரி | 1/320 | அரைக்காணி | 1/160 |
| அரைக்காணி முந்திரி | 3/320 | காணி | 1/80 |
| கால் வீசம் | 1/64 | அரைமா | 1/40 |
| அரை வீசம் | 1/32 | முக்காணி | 3/80 |
| முக்கால் வீசம் | 3/64 | ஒருமா | 1/20 |
| மாகாணி(வீசம்) | 1/16 | இருமா | 1/10 |
| அரைக்கால் | 1/8 | மூன்றுமா | 3/20 |
| மூன்று வீசம் | 3/16 | நாலுமா | 1/5 |

போன்ற பின்ன இலக்கங்களுக்கும் தமிழ்ச்சொற்கள் உள்ளன.

**கலைச்சொற்களின் தேவை :**

வேற்று மொழிச்சொற்களை எளிதாக நினைவில் வைத்துக் கொள்வதற்கு மேலும் நேரத்தை செலவிட வேண்டும். நம் சிந்தனை வேகத்தையும் இது மட்டுப்படுத்தும். சொற்கள் பேசும்போது ஒலித்திரிபு ஏற்பட்டுப் பொருள்மயக்கம் உண்டாகும். கேட்போர்க்குப் பொருள் புரியாத நிலை ஏற்படும்.

இது ஒரு புறமிக்க ஒரு காலகட்டத்தில் தாய்மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையைவிட வேற்று மொழிச்சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவேதான் வாழ்க்கையில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளுக்கான கலைச்சொற்களை எல்லாம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

**கடல்சார்ந்த சொற்கள் :**

தமிழர்கள் பழங்காலத்திலேயே கடல் துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்தனர். சங்க இலக்கியத்தில் நாவாய், வங்கம், தோணி, கலம் போன்ற பல வகையான கடற்கலன்கள் இயக்கப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளன. இதில் தமிழ்ச் சொல்லாகிய நாவாய் என்பதே ஆங்கிலத்தில் நேவி என ஆகியுள்ளது.

உலகின் தொன்மையான மொழியாகவும் செவ்வியல் மொழிகளுள் ஒன்றாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம்மொழியின் கடல் சார்ந்த சொற்களில் **எறிதிரை** {Ερύθραν **(எறுதிரான்)**}, **கலன்** {Γλαύκου **(கலயுகோய்)**}, **நீர்** {Νηρῆς **(நீரியோஸ்)**, Νηρέα **(நீரிய)**}, **நாவாய்** {Ναύ **(நாயு)**}, **தோணி** {Θωνις **(தோணீஸ்)**}– போன்ற தமிழ்ச்சொற்கள் இடம்பெற்றுள்ளன.

**பா வடிவங்கள் :**

தமிழில் பா என்றால் பாட்டு. இச்சொல் கிரேக்க மொழியின் தொன்மையான காப்பியமாகிய இலியாத்தில் **பாய்யியோனா** {πα ήονα} எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போலோ என்னும் கடவுளுக்குப் பாடப்படுவது 'பா' எனக் கிரேக்கத்தில் குறிக்கப்படுகிறது.

பா வகைகளுள் ஒன்று வெண்பா. வெண்பாவின் ஓசையானது செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் சாப்போ என அழைக்கப்படுகின்றன.

**மொழிப்பெயர்ப்பின் தேவை :**

வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியல் துறைக் கலைச்சொற்களை உடனுக்குடன் தமிழ்மொழியில் மொழிபெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். அப்போதுதான் தமிழ்மொழி அறிவுக்கான கருவியாக மாறும். தமிழில் உள்ள தத்துவம், அரசியல் ஆகிய துறைகளின் சிந்தனைகளை எல்லாம் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்ல வேண்டும். இதுவும் நம் தமிழ்மொழி நிலைத்திருக்க நாம் செய்யவேண்டிய இன்றியமையாத பணியாகும்.

**முடிவுரை :**

நம்மொழி தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமானால் வளர்ந்து வரும் மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிறதுறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். நம்மொழியில் புதிய புதிய சொல் வளம் பெருக வேண்டும்.

## பாடநூல் வினாக்கள்

**குறுவினா**

**1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**

- சாஃப்ட்வேர் (Software) – மென்பொருள்
- ப்ரௌசர் (Browser) – உலவி
- க்ராப் (Crop) – செதுக்கி
- கர்சர் (Cursor) – ஏவி (அல்லது) சுட்டி
- சைபர்ஸ்பேஸ் (Cyberspace) – இணையவெளி

www.surabooks.com



**சிறுவினா**

1. **சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது ?**

**சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் பெற்ற மாற்றம்:**

| தமிழ் | கிரேக்கம் |
|---|---|
| எறிதிரை | எறுதிரான் |
| கலன் | கலயுகோய் |
| நீர் | நீரியோஸ், நீரிய |
| நாவாய் | நாயு |
| தோணி | தோணீஸ் |

2. **வளரும் செல்வம் – உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.**

| பிறமொழிச் சொற்கள் | தமிழ்ச்சொற்கள் |
|---|---|
| சாஃப்ட்வேர் (Software) | மென்பொருள் |
| ப்ரௌசர் (Browser) | உலவி |
| க்ராப் (Crop) | செதுக்கி |
| கர்சர் (Cursor) | ஏவி (அல்லது) சுட்டி |
| சைபர்ஸ்பேஸ் (Cyberspace) | இணையவெளி |
| சர்வர் (Server) | வையக விரிவு வலை வழங்கி |
| போல்டர் (Folder) | உறை |
| லேப்டாப் (Laptop) | மடிக்கணினி |

☆ ☆ ☆

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

# தொடர் இலக்கணம் (கற்கண்டு)

**தொடர் :**

- சொற்கள் இரண்டு முதலாகத் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர் எனப்படும்.

**தொடர் அமைப்பு :**

- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து ஒரு தொடர் அமையும்.

**எடுத்துக்காட்டு :** கீதா பாடம் படித்தாள்
கீதா – எழுவாய், பாடம் – செயப்படுபொருள், படித்தாள் – பயனிலை.

- ஒரு தொடர் அமைய எழுவாய், பயனிலை தவறாது அமைய வேண்டும்.
- செயப்படுபொருள் இல்லாமல் கூட தொடர் அமைவதும் உண்டு.

**எடுத்துக்காட்டு :** முருகன் வந்தான்
முருகன் – எழுவாய், வந்தான் – பயனிலை

**தொடர் இலக்கணம் :**

- ஒரு தொடர் உருவாக மூன்று உறுப்புகள் வேண்டும். எழுவாய், பயனிலை ஆகிய இரண்டு உறுப்புகளாலும் கூடத் தொடர் உருவாகும் என்பதை முன்னரே பார்த்தோம்.
- இவ்வாறு இந்த உறுப்புகள் அண்மை உறவு பெற்று தொடரும் போது தொடர் உருவாகிறது.
  **எடுத்துக்காட்டு :** இராமன் சீதையை மணந்தான்

**தோன்றா எழுவாய்:**

- எழுவாய் வெளிப்படையாகத் தெரியாமல் முன்னிலையில் ஒருமை (அல்லது) பன்மை பயனிலைக் குறித்து வரும்.
- **எடுத்துக்காட்டு :** படித்தாய் – தோன்றா எழுவாய்
- இங்கு படித்தாய் என்பது நீ படித்தாய் (ஒருமை) என்று வராமல் நீ என்ற எழுவாய் தோன்றா எழுவாயாக வந்துள்ளது. (நீ வெளிப்படையாகத் தெரியவில்லை)

**எழுவாய்:**

- ஒரு தொடர் எழுதுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல் எழுவாய் எனப்படும்.
- **எ.கா.: மங்கை** வந்தாள். மங்கை – எழுவாய்

**செயப்படு பொருள் :**

- எழுவாய் ஒரு வினையைச் (அ) செயலைச் செய்ய அதற்கு அடிப்படையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே செயப்படுபொருள் ஆகும்.
- **எ.கா.:** மீனா **கனகாம்பரத்தைச்** சூடினாள்.
  கனகாம்பரம் – செயப்படுபொருள்.

**பயனிலை :**

- ஒரு சொற்றொடரில் பயன் நிலைத்து நிற்கும் இடமே பயனிலை எனப்படும்.
- **எ.கா.** கனகாம்பரம் பூத்தது இத்தொடரில் 'பூத்தது' என்னும் வினைச்சொல் பயனிலையை குறித்தது.
- பயனிலை மூன்று வகைப்படும். அவை
- பெயர்ப்பயனிலை, வினைப்பயனிலை, வினாப்பயனிலை

**பெயர்ப்பயனிலை :**

- பெயர்ச் சொல் பயனிலையாக வருவது பெயர்ப்பயனிலை எனப்படும்.

www.surabooks.com



- **எடுத்துக்காட்டு :** படித்தவள் முகிலா
  அவன் மாணவன்

| முகிலா, மாணவன் – பெயர்ப் பயனிலை |
|---|

**வினைப்பயனிலை :**

- வினைச்சொல் பயனிலையாக வருவது வினைப் பயனிலை எனப்படும்.
- **எடுத்துக்காட்டு :** அவன் வந்தான்
  நான் வந்தேன்

| வந்தான், வந்தேன் – வினைப்பயனிலை |
|---|

**வினாப்பயனிலை :**

- (வினைச் சொல்) பயனிலைக்குப் பின் வினாச்சொல் அமைந்தால் அது வினாப்பயனிலை எனப்படும்.
- **எடுத்துக்காட்டு :** சிரித்தது யார் ?
  ஓடியது எது ?

| யார் ? எது ? – வினாப்பயனிலை. |
|---|

- ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில் தான் வர வேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

**எடுத்துக்காட்டு :**

- நான் பாடத்தை படித்தேன் (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை)
- பாடத்தை நான் படித்தேன். (செயப்படுபொருள், எழுவாய், பயனிலை)
- படித்தேன் நான் பாடத்தை (பயனிலை எழுவாய், செயப்படுபொருள்)
- நான் படித்தேன் பாடத்தை (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்)
- பாடத்தைப் படித்தேன் நான் (செயப்படுபொருள், பயனிலை, எழுவாய்)

**பெயரடை :**

பயனிலையாக வரும் பெயர்ச் சொல்லுக்கு அடையாக வரும் சொல் பெயரடை ஆகும்.

| **பெயரடைச் சொற்கள் :** நல்ல, தீய, அழகிய, பெரிய, இனிய, கொடிய |
|---|

**எடுத்துக்காட்டு :**

நல்ல நூல் ஒன்று வாங்கினேன்
அகிலா அழகிய பூ சூடினாள்.

**வினையடை:** பயனிலையாக வரும் வினைச் சொல்லுக்கு அடையாக வரும் சொல் வினையடை ஆகும்.

| வினையடைச் சொற்கள் : அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக |
|---|

**எடுத்துக்காட்டு :** மகிழ்நன் மெல்ல வந்தான்
இலக்கியா வேகமாக ஓடினாள்

## வினை வகைகள்

**தன்வினை :** எழுவாய் ஒரு வினையை தானே செய்தால் அது தன்வினை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :** பந்து உருண்டது / அன்பு உண்டான்

**பிறவினை :**

எழுவாய் ஒரு செயலை (வினையை) செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.

**எடுத்துக்காட்டு :** பந்தை உருட்ட வைத்தான் / அன்பு உண்பித்தான்.

| பிறவினைகள், வி,பி, போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன. |
|---|